2005 செப்டம்பர் 21] [பேரவைத் தலைவர்]

திரு. க.சொ. கணேசன் அவர்கள் ஜெயங்கொண்டம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1989 முதல் 1991 வரை மற்றும் 1996 முதல் 2001 வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எல். இளையபெருமாள் அவர்கள் எழும்பூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1980 முதல் 1984 வரை போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார். மேலும், 1952 முதல் 1967 வரை மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். இராமநாதன் அவர்கள் அறந்தாங்கி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1971 முதல் 1976 வரை திறம்பட பணியாற்றியுள்ளார்.

திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் திருவில்லிப்புத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு ஐந்து முறை தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1977 முதல் 1980 வரை, 1980 முதல் 1984 வரை, 1985 முதல் 1988 வரை, 1991 முதல் 1996 வரை மற்றும் 1996 முதல் 2001 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

திரு. முனு ஆதி, முன்னாள் பேரவைத் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். திரு. முனு ஆதி, முன்னாள் பேரவைத் தலைவர் அவர்கள் மறைவு குறித்து கீழ்க்காணும் தீர்மானத்தை பேரவைமுன் வைக்கிறேன்:

[பேரவைத் தலைவர்] [2005 செப்டம்பர் 21

"1962 முதல் 1980 வரை சைதாப்பேட்டை, திருப்போரூர் மற்றும் தாம்பரம் தொகுதிகளிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தொடர்ந்து நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பேரவை உறுப்பினராகவும், 1977 முதல் 1980 வரை ஆறாவது சட்டமன்றப் பேரவையில் பேரவைத் தலைவராகவும் பணியாற்றிய திரு. முனு ஆதி அவர்கள் 21–6–2005 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை மிகுந்த வருத்தம் கொள்கிறது. திரு. முனு ஆதி அவர்கள் இனிய பண்பும், எளிமையும், அடக்கமும் தன்னகத்தே கொண்டு வாழ்ந்தவர். அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் பண்பால் அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றவர். தனது ஆழ்ந்த அனுபவத்தாலும், செயலாற்றலாலும், ஜனநாயக, சட்டமன்ற மரபுகளை பாரபட்சமின்றி நேர்மையுடன் கடைபிடித்து பேரவையின் மாண்பையும், பாரம்பரியத்தையும் பேணிக்காத்த பெருமையுடைத்தவர். இப்பெருந்தகையின் மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

இத்தீர்மானத்தை நிறைவேற்றுமுகத்தானும், மறைந்த முன்னாள் பேரவைத் தலைவர் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையி மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண் மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை (22–09–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10–07 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

- - -